நகராட்சி நிர்வாகம்,
திருச்செந்தூர் –628215
நாள்: 16.06.2022

சாதாரணக்கூட்டம்

அன்புடையீர் வணக்கம்,

திருச்செந்தூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 24.06.2022 தேதி வெள்ளி கிழமை, காலை 10.30 மணிக்கு நகர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தலைவர்
திருச்செந்தூர் நகராட்சி

பொருள் எண். 01

15–வது மத்திய நிதி ஆணையம், 2022 – 2023– ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றுவாறு சொத்துவரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.11.2019–ன் படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு , பண வீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின்

திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022 – 2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

அரசாணை (நிலை) எண்: 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி, காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற் கொண்டு 2022 – 2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண்: 52 நாள்:06.04.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சொத்துவரி உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் தமிழ் முரசு (19.04.2022), தமிழ் தினசரி செய்திதாளில் விளம்பரப்படுத்தப்பட்டது. மேற்படி சொத்துவரி சீராய்வு தொடர்பாக 30 தினங்கள் கடந்த நிலையில் கீழ்க்கண்ட விபரப்படி ஆட்சேபனைகள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	பெறப்பட்ட ஆட்சேயபனை மனுக்களின் விவரம்	ஆட்சேபனைகள் வரப்பெற்ற நாள்
1	கம்யூனிஸ்டு கட்சி	13.05.2022

இந்நகராட்சியில் கடந்த 01.04.2008 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ சொத்துவரி பொது சீராய்வு நடைபெற்று 14 வருடங்கள் கடந்த நிலையில் நகராட்சியின் அன்றாட பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளுக்கன நிதிச் செலவுகளை எதிர்கொள்வதற்கும், நிலுவையிலுள்ள கடன்களை திருப்பி செலுத்துவதற்கும், நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்துவது மிக மிக அத்தியவசியாமாகிறது. ஆகவே மேற்கூறிய காரணங்களால் ஆட்சேபனை மனுக்களை தள்ளுபடி செய்து தற்போது பொது சீராய்வு மேற்கொள்வது தமிழக அரசின் கொள்கை முடிவு என்பதாலும், அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.03.2022–ன் படி திருச்செந்தூர் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி / காலியிட வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உயர்வு செய்ய தீர்மானித்த காரணிகளை ஊர்ஜிதம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 67:– தீர்மானிக்கப்பட்டது

.

பொருள் எண். 02

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கட்டிட பணிகள் மற்றும் சாலை பணிகள் மேற்கொள்ள புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய கீழ்கண்ட நபர்கள் சொத்து மதிப்பு மற்றும் GST சான்றுடன் விண்ணப்பம் செய்துள்ளார்கள். மேற்படி கீழ்கண்ட நபர்களை நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

வ.எண்	பெயர்	முகவரி
1.	திரு, சிவராஜன்,	51/20, கல்யாணசுந்தர விநாயகர் கோவில் தெரு, திருச்செந்தூர்.
2.	திரு. பா. செந்தில்குமார்,	த/பெ. பால்ராஜ் நாடார், 4/1A2, விநாயகர் காலனி, திசையன்விளை ரோடு, உடன்குடி – 628203.
3.	திரு. சக்திவேல்	த/பெ. அருணாச்சல நாடார், 76ஏ, தேரியூர், கிழக்குத் தெரு, கிறிஸ்டியா நகரம் அஞ்சல்.

தீர்மாணம் எண். 68:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 03

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய தெரு விளக்கு மின் இணைப்பு 17 எண்ணமும் புதிய தெரு விளக்குகள் 70 எண்ணமும், புதிய மின் இணைப்பு மற்றும் தெரு மின் விளக்கு அமைக்க மதிப்பீடு தொகை ரூ. 3.31.480/– தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

வ.எண்.	தெரு பெயர்	தெரு விளக்கு எண்ணிக்கை
1.	ஸ்டார் மாடல் தெரு	8
2.	குமாரபுரம் முதல் மாவீரன் நகர்	5

3.	பாளை ரோடு முதல் அன்னை மார்கட்டிங் ரோடு	4
4.	குமாரபுரம் முதல் சங்கிவிளை	11
5.	ஜெயந்தி நகர் பகுதி	11
6.	பரமன்குறிச்சி ரோடு (சங்கிவிளை)	4
7.	மயிலாபுரம் நவாலடிசந்து	2
8.	தோப்பூர் (ஜே. ஜே. நகர்)	3
9.	தோப்பூர் (மேற்பகுதி I)	4
10.	தோப்பூர் (மேற்பகுதி II)	2
11.	தோப்பூர் (கிழக்கு பகுதி I)	4
12.	தோப்பூர் (கிழக்கு பகுதி II)	2
13.	தோப்பூர் (தெற்கு)	2
14.	தோப்பூர் (தெற்கு பகுதி)	3
15.	தோப்பூர் (புதுக்காலணி)	2
16.	மார்கெட் ரோடு முதல் பயணியர் விடுதிரோடு	2
17.	ஜீவா நகர் முதல் தெரு கடைசி தேவலாய கீழ்புறம் வாயில் கிழக்கு	1
	மொத்தம்	**70**

தீர்மாணம் எண். 69:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 04

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்புகள் 2022 – 23 திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. (மொத்த மதிப்பீட்டில் 2.00 கோடி அரசு நிதியும், 1.50 கோடி ரூபாய் நகராட்சி பொதுநிதியும்)

S.No	Name of Municipality	Sector	No. of Works / Package	Project Cost (Cr)	State Special Fund (Cr)	Municipality General Fund (Cr)
1	Tiruchendur	New Office Building	1	3.50	2.00	1.50

மேற்படி திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளவுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மாணம் எண். 70:– தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்: 05</u>

திருச்செந்தூர் நகராட்சியில் **15 வது நிதிக்குழு மானியம் திட்டம் 2020 –2021** கீழ், கீழ்கண்ட பணிகள் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	**பணி விபரம்**	**மதிப்பீடு (லட்சத்தில்)**	**தேஜா ஸ்டாக் ஒப்பந்தகாரர் திருச்செந்தூர்**	**திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர், நடுவக்குறிச்சி**
1.	அமலிநகர் முதல் முத்துமாலையம்மன் கோவில் தெரு வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	**5.00**	**8.23% உயர்வு**	**4.90% உயர்வு**
2.	ஜீவாநகர் முதல் கல்யாணசுந்தர விநாயகர் கோவில் தெரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	**3.00**	**8.17% உயர்வு**	**4.90% உயர்வு**
3.	அரசு மருத்துவமனை பின்புறம் முதல் எடிசன் மருத்துவமனை எதிர்புறம் வரை புதியதாக குடிநீர் மெயின் குழாய் அமைத்தல்.	**6.50**	**8.54% உயர்வு**	**4.90% உயர்வு**

அலுவலக குறிப்பு :– குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர்,

நடுவக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 71:– தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்: 06

திருச்செந்தூர் நகராட்சியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்** 2021 –2022 கீழ், கீழ்கண்ட பணிகள் செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	தேஜா ஸ்டாக் ஒப்பந்தகாரர் திருச்செந்தூர்	திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர், நடுவக்குறிச்சி
1.	திருச்செந்தூர் நகராட்சி குமாரபுரம் வார்டு –1 திருச்செந்தூர் பாளை மெயின் ரோட்டில் வடக்கு பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்.	6.00	5.85% உயர்வு	4.97% உயர்வு
2.	திருச்செந்தூர் நகராட்சி குமாரபுரம் வார்டு –1 திருச்செந்தூர் பாளை மெயின் ரோட்டில் தெற்கு பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்.	6.00	5.85% உயர்வு	4.97% உயர்வு

அலுவலக குறிப்பு.:– குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர்,

நடுவக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண். 72:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 07

திருச்செந்தூர் நகராட்சியில் மாண்புமிகு நகராட்சி முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் **தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதியினை பயன்படுத்தி** கீழ்கண்ட பணி செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

வ.எண்.	பணி விபரம்	மதிப்பீடு (லட்சத்தில்)	தேஜா ஸ்டாக் ஒப்பந்தகாரர் திருச்செந்தூர்	திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர், நடுவக்குறிச்சி
1.	திருச்செந்துர் பேருந்துநிலையம் அருகில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல்.	36.28	3.48% உயர்வு	2.36% உயர்வு

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வித்யாசாகர், ஒப்பந்தகாரர், நடுவக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்கலாம்.

தீர்மாணம் எண். 73:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 08

பொதுநிதி 2022–2023 ன் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

வ.எண்.	பணியின் விவரம்	மதிப்பீடு
1.	சுப்பிரமணியபுரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் பம்பிங் மெயின் குழாய் அமைத்தல்.	40,000/–
2..	வீரராகவபுரம் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.	30,00,000/–
3.	வெயிலுகந்தம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.	35,00,000/–
4.	முதல் சந்தி தெரு மற்றும் இரண்டாம் சந்தி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.	23,00,000/–
5.	கிருஷ்ணன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.	22,50,000/–
6.	அன்பு நகர் பகுதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் அமைத்தல்.	3,00,000/–

தீர்மாணம் எண். 74:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 09

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 07.12.2021 முதல் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. வட்டார மருத்துவ அலுவலர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், காயாமொழி அவர்கள் தனது கடிதத்தில், திருச்செந்தூர் நகராட்சி பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 50 வீடுகளுக்கு ஒருவர், ஒரு வாரத்திற்குள் முடிக்க ஏதுவாக கூடுதல் மஸ்தூர் நியமிக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இந்நேர்வு தொடர்பாக, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியின் மொத்த குடியிருப்புகள் 10557 ஆகும். அதனடிப்படையில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 300 வீடுகளுக்கு ஒருவர் வீதம், ஒரு வாரத்திற்குள் முடிக்க 35 (10557÷300) டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் தேவைப்படுகிறது. தற்போது இந்நகராட்சியில் 20 டெங்கு மஸ்தூர்கள் மட்டுமே உள்ளனர். எனவே கூடுதலாக 15 டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் நியமிக்க வேண்டியுள்ளது. மேலும் பணியாளர்களுக்கான சம்பள தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 75:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 10

திருச்செந்தூர் நகராட்சி 3வது வார்டு உறுப்பினர் திரு. ஜே.வி. அந்தோணி ட்ரூமன் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. ஜீவாநகரில் மக்கள் குளிப்பதற்கு சிறிய தொட்டி அமைத்து தர கேட்டல்.
2. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அமைந்துள்ள சுகாதார அலுவலகத்திற்கு செல்வதற்கு வசதியாக இரண்டு தெருவிளக்குகள் அமைத்து தர கேட்டல்.
3. 3வது வார்டில் முக்கியமான இடங்களில் மினி சோடியம் அமைத்து தர கேட்டல்.

தீர்மானம் எண்.76:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 11

திருச்செந்தூர் நகராட்சி 5 வது வார்டு உறுப்பினர் திரு. மா. சுதாகர் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. பழுதடைந்த கிணறுகளை சுத்தம் செய்து மூடி அமைத்து தர கேட்டல்.

தீர்மானம் எண். 77:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 12

திருச்செந்தூர் நகராட்சி 8 வது வார்டு உறுப்பினர் திருமதி. கிருஷ்ணவேணி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. T.B. ரோடு ஆனந்தவிநாயகர் காலனி தெரு, பட்டர்குளம் தெரு மற்றும் Phonix Mobile அருகில் உள்ள தெரு ஆகியவற்றிற்கு பேவர் பிளாக் அமைத்து தர கேட்டல்.
2. அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வடிகால் முதல் கற்றலின் இனிமை துவக்கப்பள்ளி வரை உள்ள வடிகால் சுத்தம் செய்து தர கேட்டல்.

தீர்மானம் எண். 78:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

திருச்செந்தூர் நகராட்சி 14 வது வார்டு உறுப்பினர் திருமதி. கோ. ரேவதி அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. புளியடி தெருவில் உள்ள கழிவுநீர் ஓடைக்கு மூடி அமைத்து தர கேட்டல்.
2. அவரவர் வீட்டின் முன்பு கழிவு நீர் ஓடை உடைந்துள்ளதை சரி செய்து தர கேட்டல்.

தீர்மானம் எண். 79:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 14</u>

திருச்செந்தூர் நகராட்சி 18 வது வார்டு உறுப்பினர் திரு. N. ஆறுமுகம் அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. முத்தாரம்மன் கோவில் முன்புறம் சாலையை அகலப்படுத்தி தர கேட்டல்.
2. பரமன்குறிச்சி சாலையில் மக்கள் குளிப்பதற்கு தண்ணீர் தொட்டி கட்டி தர கேட்டல்.

தீர்மானம் எண். 80:– தீர்மானிக்கப்பட்டது

<u>பொருள் எண். 15</u>

திருச்செந்தூர் நகராட்சி 20 வது வார்டு உறுப்பினர் திருமதி. முத்து ஜெயந்தி மற்றும் 27 வது வார்டு உறுப்பினர் திருமதி. லீலா அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. அமலி நகரில் அமலி அன்னை தேவாலயம் அருகில் ஒரு குடிநீர் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தர கேட்டல்.

2. அனைத்து தெருக்களிலும் பேவர் பிளாக் பதித்து தரவும் மழைநீர் வீடுகளுக்குள் வராதவாறு தெருக்களை சீரமைத்து தரவும் கேட்டல்.
3. வேகத்தடை அனைத்திற்கும் வண்ணம் பூசி தர கேட்டல்.

தீர்மானம் எண். 81– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 16

திருச்செந்தூர் நகராட்சி 22 வது வார்டு உறுப்பினர் திருமதி. லிங்கசெல்வி ஈந்தடிமுத்து அவர்கள் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டி, அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

1. 3" இஞ்ச் குடிநீர் குழாய் இல்லாத இடங்களை சரி பார்த்து, பொது குடிநீர் குழாய்களும் அமைத்து தர கேட்டல்.

தீர்மானம் எண். 82:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 17

கந்தசாமிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சிறுவர்கள் விளையாட பூங்கா அமைத்து தர தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கந்தசாமிபுரம்அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

தீர்மானம் எண். 83:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 18

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள். 08.04.2022 ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, திருச்செந்தூர் நகராட்சியில் சொத்துவரி / காலிமனைவரி 01.04.2022 முதல் பொது சீராய்வு மேற்கொள்வது குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, சொத்துவரி உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் 19.04.2022 ம் தேதி அன்று தமிழ் முரசு மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா ஆகிய செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான **பட்டியல் தொகை ரூ. 103169/– ஸ்ரெஸ்டா கம்யூனிகேசன்** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு..

தீர்மானம் எண். 84:– தீர்மானிக்கப்பட்டது

.

பொருள் எண்: 19

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள். 08.04.2022 ல்

தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, திருச்செந்தூர் நகராட்சியில் சொத்துவரி / காலிமனைவரி 01.04.2022 முதல் பொது சீராய்வு மேற்கொள்வது குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, சொத்துவரி உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் / ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் 19.04.2022 ம் தேதி அன்று தமிழ் முரசு திருச்செந்தூர் தமிழ் செய்தி தாள் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா, திருச்செந்தூர் ஆங்கில செய்தி தாளிலும், அலுவலக விளம்பர பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. மேற்படி சொத்துவரி சீராய்வு தொடர்பாக 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபனைகள் வரப்பெற்ற சூழ்நிலையில், ஏறத்தாழ சொத்துவரி பொது சீராய்வு நடைபெற்று 14 வருடங்கள் கடந்த நிலையில் நகராட்சியின் அன்றாட பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளுக்கென நிதிச் செலவுகளை எதிர்கொள்வதற்கும், நிலுவையிலுள்ள கடன்களை திருப்பி செலுத்துவதற்கும், நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்துவது மிக மிக அத்தியாவசியாமாகிறது. ஆகவே மேற்கூறிய காரணங்களால், ஆட்சேபனை மனுக்களை தள்ளுபடி செய்து தற்போது பொது சீராய்வு மேற்கொள்வது தமிழக அரசின் கொள்கை முடிவு என்பதாலும், அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.03.2022–ன் படி திருச்செந்தூர் நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி / காலியிட வரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கு உயர்வு செய்ய தீர்மானித்த காரணிகளை ஊர்ஜிதம் செய்ய நகர்மன்றத்திடமிருந்து முன் அனுமதி பெறப்பட்டு, பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் 27.05.2022 ம் தேதி அன்று மாலை முரசு மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியாஆகிய செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான **பட்டியல் தொகை ரூ. 211142/– எந்த்ரால் கம்யூனிகேசன் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு..

தீர்மானம் எண். 85:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 20

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கடந்த மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையில் அனைத்து வார்டுகளிலும், பொது இடங்களிலும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக சாலை ஓரங்களில் வளர்ந்துள்ள முட்செடிகள் மற்றும் மணல் திட்டுகள் மற்றும் கடற்கறை மணல் அடைப்பை சரி செய்தல் (மாதத்திற்கு 3 அல்லது 4 நாட்கள்) போன்ற அனைத்து பணிகளையும் செய்த வகைக்கு கே.கே. கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு பட்டியல் தொகையாக ரூ.9,94,500/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 86:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 21

திருச்செந்தூர் நகராட்சியில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டதாலும் தற்பொழுது பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாலும் பணிகள் நடைபெறும்பொழுது குடிநீர் விநியோகக்குழாய்கள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் பம்பிங் செய்யும் பிரதானக்குழாய்களிலும் பழுது ஏற்பட்டு குடிநீர் விரயமாகி வருவதால் பொதுமக்களுக்கு சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. ஆதலால் பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் பணியின் அவசியம் கருதியும் நகராட்சிப்பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகக்குழாய்கள் மற்றும் பம்பிங் செய்யும் பிரதானக் குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் பழுதடைந்துள்ள வால்வுகளையும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு சரி செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 87:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 22

திருச்செந்தூர் நகராட்சியில் பொதுமக்களுக்கு குரங்கனி, கானம் மற்றும் எல்லப்பநாயக்கன்குளம் ஆகிய நீரேற்றும் நிலையங்களிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் விநியோகக்குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் உடைப்புகளால் பொதுமக்களுக்கு சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு சரி செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 88:– தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்: 23

உதவி செயற்பொறியாளர், பெருமின் வழி கட்டுமானம், திருநெல்வேலி அவர்களின் கடித எண். உசெபொ/பெமிவக/தூடி/கோ. 400 கி.வோ.

மின்பாதை.அ.எண். 63/22, நாள். 14.03.2022 ல் கண்ட கடிதத்தில் கீழத்திருச்செந்தூர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஆலந்தலை கிராமத்திற்கு அருகில் உள்ள திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான குப்பைகிடங்கின் ஓரமாக குப்பைகிடங்கிற்கு இடையூறு இல்லாமல் ஒரு உயர் அழுத்த மின் கோபுரத்திற்கான அடித்தளம் (கோபுர எண்.10/0) அமைத்து மின்கோபுரம் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட உயர்அழுத்த மின்கோபுரத்திற்கு இருபுறமுள்ள கோபுரத்திறகான அடித்தளம்அமைக்கப்பட்டு கோபுரம் பொருத்தும் பணியானது நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு சொந்தமான குப்பைகிடங்கின் ஓரமாக 400 கி.வோ. உயர் அழுத்த மின்கோபுரம் (கோபுர எண். 10/10) மற்றும் மின் பாதை அமைக்கும் பணிக்கு அனுமதி வேண்ய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு :-

உதவி செயற்பொறியாளர், பெருமின் வழி கட்டுமானம், திருநெல்வேலி அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் நகராட்சிக்கு சொந்தமான குப்பைகிடங்கின் ஓரமாக 400 கி.வோ. உயர் அழுத்த மின்கோபுரம் (கோபுர எண். 10/10) மற்றும் மின் பாதை அமைக்கும் பணிக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அமைவிடமானது குப்பைகிடங்கின் மையப்பகுதியாக உள்ள காரணத்தினால், மேற்படி பணிக்கு அனுமதி வழங்க வழி வகையில்லை.

தீர்மானம் எண். 89:- அலுவலக குறிப்பு ஏற்று தீர்மனம் எண். 79 நிராகரிக்கப்பட்டது.

பொருள் எண்: 24

ஆலந்தலை வளமீட்பு பூங்காவில் புதியதாக தண்ணீர் தொட்டி, சுற்றிலும் மேற்கூரை மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள, அதனை அளவீடு செய்து, ஒப்பந்த முறையில் பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 90:- தீர்மானிக்கப்பட்டது.

(ஓம்) திருமதி. ர.சிவஆனந்தி,
தலைவர்
திருச்செந்தூர் நகர் மன்றம்

/உண்மை நகல்/

ஆணையாளர்
திருச்செந்தூர் நகராட்சி